I Additional District Court, Thoothukudi.

O.S.No.85/2010 நாள் : 17.06.2026 வா.சா.1–

திருமதி.செல்லம்மாள்

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்துக்கள் என் பாட்டனார் பெரியசாமி செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு ஆவுடையப்பன் செட்டியார் மற்றும் முத்துசாமி செட்டியார் என்ற இரண்டு ஆண்பிள்ளைகள் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் என் சித்தப்பா முத்துசாமி செட்டியாரின் மனைவி மற்றும் பிள்ளைகள். ஆவுடையப்பன் செட்டியாருக்கு முதலில் மாரியம்மாள் என்ற மனைவி இருந்தார். அவர்களுக்கு பெரியசாமி என்ற மகன் இருந்தார். அவர் இறந்துவிட்டார். அவருக்கு மனைவி பிள்ளைகள் இருக்கிறார்கள். பெரியசாமியின் மனைவி பெயர் சீதாலெட்சுமி. அவரது பிள்ளைகள் பெயர் ஜெயமணி மற்றும் சுமதி. சீதாலெட்சுமி மற்றும் அவரது பிள்ளைகளை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் சொத்தில் பாகம் வேண்டாம் என்று சொல்லிவிட்டதால் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. அவர்கள் வேண்டாம் என்று சொன்னதற்கு ஆவணம் எழுதி வாங்கவில்லை. ஆனால் சட்டப்படி அவர்களுக்கும் தாவா சொத்துக்களில் பங்கு உண்டு என்றால் சரியல்ல. மேற்படி பெரியசாமி சொத்தில் பாகம் வேண்டாம் என்று சொல்லியுள்ளதால் அவரது வாரிசுகளுக்கு சொத்தில் உரிமையில்லை. என் தாயாரின் சொந்த ஊர் டேவிஷ்புரம். இறந்துபோன 1ம் வாதி என் அண்ணன். வழக்குரையில் வாதிகளாகிய எங்களின் விலாசம் ஆறுமுகநேரியில் இருப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். ஆறுமுகநேரிக்கும் தாவா சொத்து உள்ள ஊருக்கும் சுமார் 100 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். பேருந்தில் சென்றால் சுமார் 3 மணி நேரம் ஆகும். தாவா சொத்துக்களில் தற்போது

நாங்கள் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். என் சித்தப்பா முத்துச்சாமி 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு விற்றுவிட்டார். 2ம் அயிட்ட சொத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் குடியிருக்கிறார்கள். 2ம் அயிட்ட சொத்தை என் தகப்பனாரும் சித்தப்பாவும் இருக்கும்போதே பிரித்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. 2ம் அயிட்ட சொத்திற்கு வருவாய்துறை ஆவணங்கள் 1முதல் 4 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் நாங்கள் பிழைக்க வந்தபிறகு அவர்கள் பெயரில் மாற்றி கொண்டார்கள். வாதிகளாகிய நாங்கள் எங்கள் பெற்றோருடன் ஆறுமுகநேரியில் குடியிருந்தோம். என் தகப்பனார் உயிருடன் இருந்தவரையில் நாங்கள் பசுவந்தனைக்கு வரவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள புகைப்படங்கள் வாதிகளாகிய எங்கள் புகைப்படங்கள் உள்ளன. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 14.07.2009ல் வாதிகளாகிய நாங்கள் என் கணவர் சுப்பையாவிற்கு விற்ற கிரைய பத்திரத்தின் பதிவு நகல் என்றால் சரிதான். அது பி.சா.ஆ.1. அதன்படி என் கணவருக்கு நாங்கள் 1 ஏக்கர் சொத்தை விற்றோம். அந்த சொத்து என் தகப்பனாருக்கு எப்படி வந்தது என்றால் அவர் பெயரில் பத்திரம் இருந்தது. அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பி.சா.ஆ.1ல் சொத்து என் தகப்பனாருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. 3ம் வாதியை என் கணவர் 2ம் தாரமாக திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. வழக்குரையில் எங்கள் வசதிக்காக சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் அது பொய். ஏற்கனவே பாகம் ஆகிவிட்டது என்றும் என் தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை பி,.சா.ஆ.1 படி நாங்கள் விற்றுவிட்டோம் என்றும் என் சித்தப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தை 1 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவித்து

வருகிறார்கள் என்றால் அது பொய். அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

தூத்துக்குடி.